முருகப்பெருமான் துணை

***இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கைப்பட எழுதிய நூலாகும்***

***இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்***

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு**

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 644**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

04.07.2021, ஞாயிற்றுக்கிழமை

1. கலியுகத்தை காக்கவந்த ஞானியே
   கந்தவேலன் என்அவதாரமாக வந்ததவசியே
   அழியாமை பெற்றுவந்த அரங்கனே
   அடியார்க்கு அருளுகின்ற ஞானதேசிகனே
2. தேசிகனே தவத்தின் உயர்சக்தியே
   தெய்வபலமாய் வந்த ஞானசக்தியே
   ஆசிதந்து சுப்ரமணியப்பெருமான் யானும்உமக்கு
   அருளுவேன் ஞான அறிவுரைஆசி
3. ஆசியதும் அரங்கனால் அகிலமாற்றம்
   ஆறுமுகன் யான் நடத்தித் தீருவேன்என
   வரங்கள் தந்து உமக்கு யான் சக்தியாக
   வல்லமை கூட்டி உன்னுடன் யானிருக்க
4. இருக்கவே இந்த உலகம் மாற்றம் பெறும்
   இருந்துவரும் துன்பங்கள் யாவும் அகன்றோடி
   வருந்தாவண்ணம் மக்களுக்கு பாதுகாப்பாய்
   வடிவேலன் என் சக்தியான உன் தர்மம் துணைவரும்
5. வருகவே வளங்காணும் இந்த சமூகம்
   வல்லமைபட உலகம் இயற்கை வளமும் கூடி
   முருகப்பெருமான் என் அருள் துணையோடு
   முழுமையான ஞானயுகமாற்றம் பெறும்
6. மாற்றம் தரும் எந்தன் சக்தியே
   மரணம் வெல்லுகின்ற மகா யோகியே
   ஆற்றல்பட உன் தீட்சை பெற்ற மக்களெல்லாம்
   அகிலத்தில் ஞானிகளாகும் வாய்ப்பு பெற்று
7. பெற்றுமே ஞானவான்களாக தேர்வுசெய்யப்பட்டு
   வையகத்தில் நீ செய்கின்ற உலகமாற்றத்தில்
   ஐயமற அவர்களெல்லாம் சேவையாற்றி
   அகிலம் சடுதி ஞான ஆட்சிக்காலம் உருவாகி
8. ஆகியே கலியுகம் மாற்றம்
   அரங்கன் உன்னால் ஞானயுகமாற்றமாக நடந்தேறும்
   வகையான வையக மாற்றத்திற்கு
   வணங்கி வாரீர் அரங்கன் சேவைநோக்கி

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–